# பிரதேச சாகித்திய விழா

# ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල

# 2000

## சிறப்பு மலர்

## විශේෂ කලාපය



பிரதேச செயலகம் பட்டினமும் சூழலும்

திருக்கோணமலை

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය නගර

හා කඩවත් ත්‍රිකුණාමලය


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழா

# சிறப்புமலர்

# 2000



வெளியீடு

பிரதேச செயலகம்
பட்டினமும் சூழலும்
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை பிரதேச சாகித்திய விழா 2000
## விழாக்குழு

| | |
|---|---|
| தலைவர் | : **திரு. வ. வேலும்மயிலும்**<br>பிரதேச செயலாளர் திருகோணமலை |
| உபதலைவர் | : **திரு. கே. திலகரெட்ணம்**<br>வலயக்கல்விப் பணிப்பாளர் திருகோணமலை |
| செயலாளர் | : **திருமதி. ச. மகேந்திரராஜா**<br>கலாசார உத்தியோகத்தர் |
| இணைப்பாளர் | : **திரு. எஸ். மகேந்திரராஜா**<br>மாவட்ட கலாசார உத்தியோகத்தர் |
| விழா சிறப்புக்குழு | : **திரு. கே. பாலசுந்தரம்**<br>நிர்வாக உத்தியோகத்தர்<br>பிரதேச செயலகம், திருக்கோணமலை. |
| | **திரு. எஸ். ஜெயரெட்ணம்** (அதிபர்)<br>வலயக்கல்வி திணைக்களம் |
| | **திரு. எம். வரதராஜா**<br>கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| | **திருமதி. பீ. சுதர்சன்**<br>சமூகசேவை உத்தியோகத்தர் |
| | **திரு. எஸ். நவீந்திரதாஸ்**<br>சமுர்த்தி முகாமையாளர் |
| | **திரு. எம். அருந்தவச்செல்வம்**<br>கிராமசேவை உத்தியோகத்தர் |
| | **திரு. எம். பற்றிக் அன்ரனி**<br>கிராமசேவை உத்தியோகத்தர் |
| | **திரு. எஸ். ஸ்ரீ கணேசலிங்கம்**<br>கிராமசேவை உத்தியோகத்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. எஸ். சுதாகரன்**
கிராமசேவை உத்தியோகத்தர்

**திரு. என். ஜெயகாந்தன்**
கிராமசேவை உத்தியோகத்தர்

**ஜனாப். வி. எம். ஏ. காதர்**
எழுதுவினைஞர்

**திருமதி. பி. இந்துமதி**
எழுதுவினைஞர்

**திருமதி. ந. நவீந்திரதாஸ்**
எழுதுவினைஞர்

**திருமதி. நீற்ரா பெர்ணாண்டோ**
எழுதுவினைஞர்

**திருமதி. ஆர். திலகவதி**
தட்டெழுத்தாளர்

**செல்வி. த. வசந்தாலெட்சுமி**
தட்டெழுத்தாளர்

**திருமதி. யூ. நளினி**
தட்டெழுத்தாளர்

பொதுக்குழு : **பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்**
**கிராம சேவை உத்தியோகத்தர்கள்**
**வலயக்கல்வித் திணைக்கள**
**உத்தியோகத்தர்கள்**

அட்டைப்படம் : **திரு. ஏ. சிவானந்தம்**
கிராம சேவை உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர்

## திரு. ஜீ. கிருஸ்ணமூர்த்தி அவர்களின்

# ஆசியுரை

திருக்கோணமலை பட்டணமும் சூழவும் பிரதேச செயலகத்தினால் கடந்த மூன்று ஆண்டுகளாக பிரதேச சாகித்திய விழா நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கும், செழுமைக்கும் புத்துயிர் ஊட்டும் வகையில், நடத்தப்படும் இவ் விழாவிலே பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் கட்டுரைப் போட்டி, திறந்த போட்டியாக நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதைப் போட்டிகளுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுவது மிகவும் சிறப்பு வாய்ந்த அம்சமாகும்.

கடந்த கால சமுதாய வாழ்க்கை முறை பாரம்பரியம் பண்பாடு போன்றவற்றை கலை, இலக்கியங்கள் ஊடாகவே நாம் பார்க்கின்றோம். இந்த வகையில் கலை, இலக்கியப் படைப்பாளர்களை ஊக்குவிப்பதும், கௌரவிப்பதும், மனித நல மேம்பாட்டின் பிரதான பணிகளில் ஒன்றாகும். மேலும் இவ்விழா பிரதேச மக்களின் பரஸ்பரம் புரிந்துணர்வு, ஒற்றுமை என்பவற்றிற்கு புத்தாயிரம் ஆண்டில் வழிவகுக்க வேண்டும் என வேண்டி இவ்விழா இனிதே நடந்தேற எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

வடக்கு கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.

ஜீ. கிருஸ்ணமூர்த்தி
பிரதம செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

# திரு. க. பரமேஸ்வரன் அவர்களின்

# ஆசிச்செய்தி

திருகோணமலை பட்டினமும்
சூழவும் பிரதேச செயலாளர் பிரிவினால்
வருடந்தோறும் மிகச் சிறப்பாக பிரதேச சாகித்திய
விழாவும் மலர் வெளியீடும் நடாத்தப்பட்டுவருவதனை
நான் நன்கறிவேன். இப்பிரதேசத்தில் வாழ்கின்ற
எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஊக்குவிக்கும்
நோக்கோடும், மாணவர்களுடைய ஆக்கத்திறனை வெளிப்படுத்தும்
எண்ணக் கருத்தோடும் இவ்விழா எடுக்கப்பட்டு வருவது
பாராட்டற்குரியதாகும்.

மக்களது வாழ்க்கை செழுமையடைவதற்கு கலைகள் பெரிதும் உதவுகின்றன. பண்பாட்டு விழுமியங்களே எமது கலாசாரத் தன்மையை வெளிக்காட்டுகின்றன. அந்த வகையில் இவ்வாறான விழாக்கள் அவசியம் எடுக்கப்பட வேண்டும். எமது கலை கைப்பணிப் பாரம்பரியம் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளில் பிரதேச செயலாளர் மட்டத்தில் இயங்கும் கலாசார சபைகள் முன்னின்று உழைக்க வேண்டுமென்பதே எனது பெருவிருப்பாகும். எமது அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரதேச சாகித்திய விழாவும் விழாவோடு தொடர்பாக
வெளிவரவுள்ள சிறப்புமலரும் இனிதே அமைய எனது
நல்லாசிகளைக் கூறுவதில் மட்டில்லா
மகிழ்ச்சியடைகின்றேன்.

க. பரமேஸ்வரன்
செயலாளர்

வடக்கு கிழக்கு மாகாண கல்வி
பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
அமைச்சு
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்

## திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களின்

# ஆசிச்செய்தி

திருக்கோணமலையின் வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. இதனை புராண இதிகாசங்கள் விளக்குகின்றன. இங்கு காணப்படும் புராதன சின்னங்கள் இதன் வரலாற்றுப் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது. ''குடிதனை நெருங்கி பெருக்காமாய்த் தோன்றும்'' திருக்கோணமலையின் சிறப்பைப் பற்றி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரப் பாமாலையாகப் போற்றியுள்ளார்.

இவ்வாறு போற்றப்படும் திருக்கோணமலையில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரதேச சாகித்திய விழா இம்முறையும் சிறப்பாக நடத்தப்படுவதையிட்டு விழாக் குழுவினருக்கும் விழாவோடு ஒத்துழைக்கும் பொது மக்களுக்கும் எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கின்றேன். பிரதேச பாரம்பரியம் கலை இலக்கிய மேம்பாடு என்பவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் பிரதேச சாகித்திய விழா ஒழுங்கு செய்து நடத்தப் படுவதை யாவரும் அறிவர். இவ் விழாவில் கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சிறப்பு மலர் ஒன்றை விழாவில் வெளியீடு செய்வது மேலும் சிறப்பான விடயமாகும் இம் மலர் சமுதாய மேம்பாட்டிற்கேற்ற இலக்கிய ஆக்கங்களும் கருத்துக்களும் தாங்கி வெளி வந்து நல்ல அறிவு மணம் பரவச் செய்ய வேண்டும் என்று எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்துசமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்,
இல. 98, வாட் பிளேஸ்,
கொழும்பு -7.

*திருமதி. சாந்தி நாவுக்கரசன்*
பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සාහිත්‍ය සැමරුම නිමිත්තෙන්
ඒ. ගල්කොටුව මහතාගෙන්

# සුභ පැතුම් පණිවිඩයක්

2000 වර්ෂය සඳහා
තිකුත් කරනු ලබන ත්‍රිකුණාමලය
නගර හා කඩවත් ප්‍රාදේශීය ලේකම්
කොට්ඨාශයේ සාහිත්‍ය සංග්‍රයට සුභ පැතුම්
මෙයින් පිරිනමමු.

දෙමල හා සිංහල නිර්මාණ ඉදිරිපත් කල සියලු දෙනාට මෙයින් ස්තුති පිරිනමන අතර, ඉදිරි වර්ෂ වල දී මීටත් වඩා සාර්ථක වේවායි පතමු. තවද මේ කාර්ය සඳහා අත දුන් කාර්ය මණ්ඩලයේ සියලු දෙනාට හා විනිශ්චය කාර්යෙන් උදවු විද්වතුන්ට ද ස්තුතිය පිරිනමමු.

ඒ. ගල්කොටුව,
සහකාර ප්‍රාදේශීය ලේකම්

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය
ත්‍රිකුණාමලය
2000-09-21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணி

# ஜனாப். உ. மு. இஸ்மாயில் அவர்களின்

# ஆசிச்செய்தி

எமது மத்தியில் பேசப்படும் பாஷைகளும், அனுஷ்டிக்கப்படும் மார்க்கக் கொள்கைகளும் நமது தேசப் பற்றை பிரகாசிக்கச் செய்வதற்குப் பதிலாக குறுகிய தன்னல மனப்பான்மையையும், அர்த்தமற்ற சந்தேகங்களையும் கிளறும் சாதனங் களாக அமைந்துள்ளன.

கடந்த பல வருடங்களாக கொண்டாடப்படும் சாகித்திய விழா இப்பகுதியில் வாழும் மூன்று இனமக்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும், பரஸ்பர நட்பையும் படிப்படியாக வளர்த்து வருகின்றது. இனத்தால், மதத்தால் பாஷையால் வேறுபட்ட மக்கள் திருகோணமலை சாகித்திய விழாக்குழு நடத்தும் போட்டிகளிலும், காலாசார நிகழ்ச்சிகளிலும் பங்கெடுக்கும் பொழுது, அவர்கள் மத்தியிலுள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட பிரிவுகள் நீக்கப்பட்டு, மனித உள்ளங்களைப் பிணைக்கும் மனிதநேயம், பரோபகார சிந்தனை, தயாள மனப்பான்மை ஆகிய சிறந்த பண்புகள் தென்படத் தொடங்குகின்றன.

மக்களின் ஒருமைப்பாட்டையும், தேசப்பற்றையும் மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட இவ்விழா மக்கள் மனதில் சமாதான ஒளியை எழுப்ப வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

திருக்கோணமலை.
10-09-2000

*ஜனாப். உ. மு. இஸ்மாயில்*
சட்டத்தரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளரும்
பிரதேச சாகித்திய விழாக் குழுத் தலைவருமாகிய

## திரு. வ. வேலும்மயிலும் அவர்களின்

# ஆசிச்செய்தி

கலை, இலக்கியங்களை மேம்படுத்துவதும், கலை இலக்கியப் படைப்பாளர்களை ஊக்கப்படுத்துவது, ஆவணப் படுத்துவது போன்ற நடைமுறைகள் தற்காலத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கான முக்கிய பங்களிப்பினை வகிப்பது பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய கலை இலக்கிய விழாக்களே என்றால் மிகையாகாது. இந்த வகையில் கலை, இலக்கிய மேம்பாட்டிற்கு பிரதேச சாகித்திய விழா வழி செய்கின்றது. புத்தாயிரம் ஆண்டிலே நடைபெறும் இவ்விழா பிரதேச மக்களின் ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும், புத்துயிர் ஊட்டும் என்பதில் ஐயமில்லை.

இம்முறையும் விழாவில் இலக்கியப் போட்டிகளுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மேற்படி விழா சிறப்பாக நடந்தேற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு. இவ்விழாவின் பொருட்டு ஒத்துழைப்பு நல்கிய கலாசார அலுவல்கள் திணைக்ளம், வலயக் கல்வித் திணைக்களம், இந்து சமய சலாசார அலுவல்கள் திணைக்களம், பிரதேச பொது நிறுவனங்கள், பொது மக்கள், உத்தியோகஸ்தர்கள், கலை இலக்கியப் படைப்பாளர்கள் யாவருக்கும் நானும், என்னுடன் இணைந்து பணியாற்றும் உத்தியோகத்தர்களும் நன்றியுடையவராவோம்.

பிரதேச செயலகம்,
பட்டணமும் சூழலும்,
திருக்கோணமலை.

*வ. வேலும்மயிலும்*
பிரதேச செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- *திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு பற்றிய சிறிய கண்ணோட்டம்*

  திரு. ந. தமிழ்ச்செல்வன்
  உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

- *திருக்கோணமலையில் நாடகங்கள்*

  திரு. காசிநாதர் சிவபாலன் (சட்டத்தரணி)

- *பாரம்பரியக்கலைகள்*

  திரு. சி. மகேந்திரராஜா
  கலாசார உத்தியோகத்தர்

- *"சமூகத்தின் சாட்சிகள்" (கவிதை)*

  ஜனாப் முகமது அனஸ்
  36, தக்கியா வீதி, திருக்கோணமலை

- "උදෑසනක්" (පද්‍ය රචනා)

  රත්තපාල මාතගේ
  නිව් රස්ටන් බස් සමාගම ත්‍රිකුණාමලය

- *"அறிவியலின் வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள சாதக பாதக விளைவுகள்"*

  செல்வி. மலர்விழி சிவபாலன்
  தி/விக்னேஸ்வரா மகா வித்தி. திருக்கோணமலை

- "විද්‍යාවේ දියුණුව හා හිතකර අහිතකර ප්‍රතිඵල"

  කේ. බී. දිස්දර්ශණී
  ත්‍රි/රාජකීය විද්‍යාලෝක මහ විද්‍යාලය.
  (ජාතික පාසැල) ත්‍රිකුණාමලය

- *"வந்திடு துணிவாய்" (கவிதை)*

  எஸ். அருளானந்தம் (கேணிப்பித்தன்)
  திருக்கோணமலை

- *போட்டி முடிவுகள்*

- *நன்றியுரை*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை பட்டணமும் சூழலும் சிறிய கண்ணோட்டம் பிரதேச செயலாளர் பிரிவு பற்றிய

பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவானது திருக்கோண மலை மாவட்டத்தில் அமைந்துள்ள பதினொரு பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒன்றாக திருக்கோணமலை நகரத்தையும், நகரத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் உள்ளடக்கிய நிர்வாக அலகாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் வட பக்கத்தில் குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவும், கிழக்கில் இந்து மகா சமுத்திரமும், தெற்கின் ஒரு பகுதி உள் துறைமுகத்தினையும், மற்றையது கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவினையும் கொண்டுள்ளதுடன், மேற்கில் தம்பலகாமம், மொறவேவா பிரதேச செயலகப் பிரிவுகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இப்பிரதேச செயலாளர் பிரிவின் மொத்த நிலப்பரப்பு 148 சதுர கி. மீற்றராகும். மேலும் இது புவியியல் ரீதியாக திருக்கோணமலை நகரசபை பிரிவு. திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைப் பிரிவு ஆகிய இரு உள்ளூராட்சி பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ள ஒரு பகுதியாகவும் காணப்படுகின்றது.

இப்பிரதேச செயலகப் பிரிவு 42 கிராம சேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. இலங்கையின் மிகப் பாரிய இயற்கைத் துறைமுகமான திருக்கோணமலைத் துறைமுகம் இப்பிரதேச செயலகப் பிரிவின் மையப் பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். அடுத்து பிறிமா மாவரைக்கும் ஆலையானது பாரிய தானியக் கப்பல்களைக் கரைக்குக் கொண்டு வந்து நிறுத்தக் கூடிய துறைமுக வசதியுடையதாக சீனக்குடாப் பகுதியில் அமைந்துள்ளது. அதே போல் மிற்சுயி சீமெந்து தயாரிக்கும் டோக்கியோ சீமெந்து தொழிற்சாலையும் சீனக்குடாவில் அதற்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்கும் வசதியுடையதான துறைமுக வசதியைக் கொண்டும் அமைந்துள்ளது. மேலும் இலங்கை வழிப் பயணம் செய்யும் கப்பல்களுக்குத் தேவையான எரிபொருட்களை வழங்கும் வசதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடையதும், பாரிய அளவில் எரிபொருட்களைச் சேமித்து வைக்கக் கூடியதுமான கொள்கலன்களைக் கொண்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அமைந்த இடமாகவும் சீனக்குடா இப்பிரதேசத்தில் அமைந்துள்ளது.

அத்துடன் இலங்கையின் மிகப் பெரிய கடற்படைத் தளமும், சீனக்குடா விமானப் படைத்தளமும், இலங்கைத் தரைப்படையின் 22வது பிரிவு தலைமையகமான பிளாண்டன் பொயின்டும் இப்பிரதேச செயலகப் பிரிவிலேயே அமைந்துள்து.

பட்டணமும் சூழலம் பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கொண்டு 1999ம் ஆண்டு இறுதியாகத் திரட்டப்பட்ட குடித்தொகை மதிப்பீட்டின் படி மொத்தம் 21728 குடும்பங்களைக் கொண்ட 94362 பேர் வாழ்கின்றார்கள். இதில் தமிழர்கள் 59897 பேர் (64%) சிங்களவர் 21939 பேர் (23%) முஸ்லிம்கள் 11436 பேர் (12%) ஏனையோர் 1090 பேர் (1%) ஆகவும் காணப்படுகின்றனர். இதில் 44945 பேர் ஆண்களாகவும், 49417 பேர் பெண்களாகவும் உள்ளார்கள்.

மீன்பிடித் தொழிலே இப் பிரதேச செயலகப் பிரிவு மக்களின் பிரதான தொழிலாக உள்ளது. ஆயினும் நாட்டின் தற்போதைய யுத்த நிலைமை காரணமாக இத் துறையை மேலும் அபிவிருத்தி செய்ய முடியாததாக உள்ளது. இரண்டாவதாக விவசாயம் மக்களின் முக்கிய தொழிலாக உள்ளது. இதுவும் மீன்பிடித் துறையைப் போன்றே நாட்டின் தற்போதைய சூழ்நிலைகளினால், மிகவும் பாதிப்படைந்த ஒரு துறையாகக் காணப்படுகின்றது. இப் பிரிவின் கடற்கரைப் பிரதேசம் ஏறக்குறைய 25 மைல்கள் வரை உள்ளதுடன் அண்ணளவாக 6000 குடும்பங்கள் மீன்பிடித் துறையை நம்பி வாழ்பவராகவும் உள்ளனர். திருக்கோணமலைப் பகுதியில் அதிகம் மீன் பிடிக்கப்படும் பிரதேசமாக இப்பிரிவு இருப்பதனால், ஏனைய பிரதேசங்களில் இருந்து இங்கு வந்தும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதையும் அவதானிக்கலாம்.

விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பு 4135 ஏக்கர்கள் ஆகும். விவசாய நடவடிக்கைகள் சிறுபோகம், பெரும் போகம் ஆகிய இரண்டிலும் நடைபெற்று வந்தது. பெரிய நீர்ப்பாசனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் ஒரு குளமும், சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் 11 குளங்களும் இப் பிரதேசத்தில் உள்ளன. இக் குளங்களிலிருந்து பெரிய நீர்ப்பாசனம் மூலம் நீர் பெறும் விவசாய நிலங்களாக 452 ஏக்கரும், சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் 846 ஏக்கரும் உள்ளன. ஏனைய 2837 ஏக்கரும் மானாவாரியாக விவசாயம் செய்யப்படுகின்றன. தற்போது யுத்த சூழ்நிலையின் காரணமாக பெரும்பாலான விவசாய நிலங்கள் கைவிடப்பட்டுள்ள துடன் மக்கள் விவசாய நிலங்கள் உள்ள பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்தும் உள்ளனர்.

அடுத்து கைத்தொழில்களைப் பொறுத்த வரையில் பெரும் கைத்தொழில் குடிசைக் கைத்தொழில்களும், பெருமளவில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. கல்வியைப் பொறுத்த வரையில் இப்பிரதேச எல்லைக்குள் 28 தமிழ் பாடசாலைகளும், 14 சிங்கள மொழிப் பாடசாலைகளும் 07 முஸ்லிம் பாடசாலைகளுமாக மொத்தம் 49 பாடசாலைகள் காணப்படுகின்றன. மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கணக்கியலும், நிதி முகாமைத்துவ பீடமும் அரச தொழில் நுட்பக் கல்லூரியும் உள்ளது. ஏனைய பிரதேச பிரிவுகளோடு ஒப்பிடுகையில் கல்வித்தரம் நன்றாக இருப்பினும் பல பாடசாலைகளில் கட்டிடம், தளபாடம், ஆசிரியர் பற்றாக்குறைகள் காணப்படுகின்றதையும் அவதானிக்கலாம். சுகாதார சேவையை நோக்கும் போது ஒரு ஆதார வைத்தியசாலையும் சில சுகாதார நிலையங்களும் சில தனியார் மருத்துவ நிலையங்களும் காணப்படுகின்றன. பொதுவாக இப்பிரதேசப் பிரிவில் சுகாதார வைத்திய வசதிகள் காணப்படுகின்ற போதிலும் இத்துறையிலும் பல பிரச்சினைகள் உள்ளன. அதாவது இப் பிரதேசத்தில உள்ள ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள மக்களுக்கு ஒரே ஒரு ஆதார வைத்தியசாலையாக இது காணப்படுவதுடன் விசேட துறை வைத்தியர்களின் பற்றாக்குறையும், நவீன வைத்திய வசதிகள் அற்ற நிலையிலும் உள்ளது. இதனால் இங்கு வைத்திய வசதிகள் அளிக்க முடியாமல் குருநாகல், கண்டி, கொழும்பு போன்ற இடங்களுக்கு நோயாளிகளை அனுப்பும் நிலையும் காணப்படுகின்றது.

இப் பிரதேச பிரிவுக்குள் அமைந்த திருக்கோணமலை நகரமானது போக்குவரத்துச் சேவைகளின் மத்திய நிலையமாக விளங்குகின்றது. வீதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட 68 கி. மீற்றர் நீளமானது. இதில் 34, 24 கி. மீ. நீளமான ஏ பிரிவு வீதியும் 14 கி. மீ. நீளமான பி. பிரிவு வீதியும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழும் ஏனைய 16 கி. மீற்றர் நீளமான சீ. பிரிவு பாதைகளும் 3, 25 கி. மீ நீளமான டி பிரிவு பாதைகளையும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழும், ஏனைய வீதிகள் உள்ளூராட்சிச் சபைகளின் கீழும் அமைந்துள்ளது. போக்குவரத்துச் சேவைகளை பஸ் சேவைகள் (அரச, தனியார்) மூலமாகவும் புகையிரத சேவைகள் மூலமாகவும் பெறக் கூடியதாகவுள்ளது. திருக்கோணமலை, சீனக்குடா ஆகிய இரு புகையிரத நிலையங்களும், பஸ் போக்குவரத்துச் சேவையின் மத்திய நிலையமும் இங்கு அமைந்துள்ளது.

ஏனைய சேவைகளைப் பொறுத்த வரையில் தபால் சேவையை எடுத்துக் கொண்டால் திருக்கோணமலை, சீனக்குடா ஆகிய இரண்டு பிரதான தபால் நிலையங்களும், ஏழு உப தபால் நிலையங்களும் நான்கு தனியார் தபாலகங்களும் உள்ளன. தொலைத் தொடர்பு வசதிகள் தற்போது சீரா நிறுவனத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டு ஓரளவில் தேவையைப் பூர்ததி செய்யக் கூடிய வகையில் அபிவிருத்தியடைந்து வருவதையும் அவதானிக்கலாம். நீர் விநியோகம் கடற்படைத் தளம் மூலமும் தேசிய வடிகால் நீர் அமைப்புச் சபை மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிராமப் புறங்களில் பலர் கிணற்று நீரையும் பயன்படுத்தி வருகின்றனர். மற்றும் வடகிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் திணைக்களங்கள் அனைத்தும் அமையப் பெற்ற இடமாகவும், திருக்கோணமலை மாவட்டத்தின் முக்கிய நகர்ப்பகுதியாகவும் இப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு விளங்குகின்றமை சிறப்பான அம்சமாக உள்ளது.

ஆகவே பல்வேறு வகைப்பட்ட இயற்கை வளங்களுடன் பல்லின மக்களும் சேர்ந்து வாழுகின்ற இப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவானது நாட்டு நிலைமை சீரடையும் பட்சத்தில் மேன் மேலும் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக திகழும் என்பதில் ஐயமில்லை எனலாம்.

*ந. தமிழ்ச்செல்வன்*
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலகம் (ப. சூ)
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையில் நாடகங்கள்

"சடங்கிலிருந்து நாடகம்வரை" என்பது பேராசிரியர் மௌனகுருவின் நாடகங்கள் பற்றிய நூலொன்றின் தலைப்பு. திருக்கோணமலை நாடகங்களைப் பற்றிக்கூறும்போது 'சடங்குகளை' ஒரு பக்கம் விட்டு நாடக வரலாற்றை தொடங்கின் அது வே. அகிலேசபிள்ளையினால் (1853-1910), 1887ம் ஆண்டில் எழுதப்பட்ட 'கண்டிராசன்' நாடகத்துடன் தொடங்கப்படலாமெனக் கூறலாம். 1930ம் ஆண்டில் இந்நாடகம் (இதனை தாபி, திருமலை நவம் ஆகியோர் கூத்து என்றே கொள்வர்), கலைஞர் வைரமுத்து தம்பிமுத்துவினால் பல தடவைமேடையேற்றப்பட்டது என அறிகிறோம்.

எனினும் இந்நாடகம் இற்றைவரை அச்சேறாதிருக்க 1925ம் ஆண்டிலே Measune for Measure எனும் ஷேக்ஸ்பியரின் நாடகம் தமிழில் 'இசபெல் அல்லது ஈஸ்வரி' என்ற கவிதை நாடகமாக வேலாயுதபிள்ளை என்பவரால் எழுதப்பெற்று அவரின் தந்தையார் சரவணமுத்து விஸ்வநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக அப்பொழுதிருந்த 'பரமேஸ்வரி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியது என்ற செய்தியை கலாபூஷணம் சித்தி த. அமரசிங்கத்தின் கட்டுரையிலிருந்து அறியக்கிடக்கிறது.

1990ம் ஆண்டுக்கு முன்னர் திருக்கோணமலையில் மேடையேற்றப்பட்ட பல நாடகங்களும் பலகட்டுரைகளிலும் பட்டியலிட்டுக் கூறப்பட்டுவிட்டன. அவை அனேகமாக வெளியாரினால் (பாடசாலை நாடகங்கள் அல்ல) மேடையேற்றப்பட்ட நாடகங்கள் ஆகும்.

எனினும் இந்நாடகங்கள் அனேகமாக மறைந்தபேராசிரியர் சு. வித்தியானந்தன் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கூறியதுபோல வரலாற்றிலிருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாசத்திலிருந்தும் தமது கதைச்சுருக்கததைப் பெற்றுக்கொண்டன ''இது நமது நாட்டு நாடக இலக்கியத்தின் பலமும் பலஷனமும் ஆகும்'' என்பார் அவர். ''பலத்தைவிட பலஷனமே இவற்றில் அதிகம் காணப்பட்டன'' என்பார் கலாநிதி மௌனகுரு. மேலும் இக்காலகட்டத்தில் மேடையேற்றப் பட்ட பல நாடகங்களும் தென்னிந்திய சினிமாப்பாணி நாடகங்களாய் அமைந்தன.

1990ம் ஆண்டுக்குப் பின்னர் அனேகமாக பாடசாலை நாடக உருவில் பல நவீன சமூகப்பிரச்னை உள்ள, பாரம்பரியத்தின் சாரத்தை உள்வாங்கிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன, படுகின்றன.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் அவற்றினை ஆவணப்படுத்தும் நோக்கில் பட்டியலிட விழைந்தால் அது இப்படிவிரியும், (பட்டியல் அறிந்தவரையில் தரப்படுகிறது)

- அஸ்திரம் 1995
- சூழலின் கைதிகள் 1996
- பிள்ளையழுத கண்ணீர்
- காதல் நெஞ்சங்கள்
- மாற்று 1997
- முறை
- எமக்கொரு மீட்பன் 1998
- லக்ஷ்மி 1997
- மலைகளைத்தகர்ப்போம் 1998
- அவனொரு மாதிரி 1998
- யார் அயலவன் 1998
- விதியா 1998
- நீங்களே தீர்ப்பளியுங்கள் 1998
- வேங்கையின் மைந்தன் 1998
- பாட்டுக்கொரு புலவன் 1998
- அக்கினிக் குஞ்சுகள் 1998
- வதம் 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நம்மைப்பிடித்த பிசாசுகள்
- மனிதத்துவம்
- மலரும் 2000

மேற் கூறிய நாடகங்களில் 'லட்சுமி' மேலும் இக்கட்டுரையாளர் நெறிப்படுத்தி கலாச்சார மண்டபத்தில் திருக்கோணமலை இந்து இளைஞர் பேரவைக்காக கமலினி செல்வராஜனைத்தவிர முற்றிலும் திருமலை நடிக, நடிகைகளைக் கொண்டு அளிக்கை செய்யப்பட்டதும் கவிஞர் கேணிப்பித்தன் (அருளானந்தம்) அவர்களால் தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்த அவரின் விமர்சனக் கட்டுரையில் சிலாகித்துக் கூறப்பட்டதுமான விபரண நாடகமான 'பாட்டுக்கொரு புலவன்' (இந்நாடகம் அதற்கு முன்னர் கொழும்பில் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும் மேடையேற்றப்பட்டது என்பது குறிப்பிட தக்கது.) போன்ற ஒருசில நாடகங்களைத்தவிர ஏனைய பல நாடகங்களும் பாடசாலைகள் தமிழ் மொழித்தின விழாப்போட்டி போன்ற நிகழ்வுகளில் மேடையேற்றப்பட்டன. இதில் இன்னொரு தகவல் இங்கே கூறப்பட்டுள்ள பல பாடசாலை நாடகங்களிலும் கீழைத்தென்றல் கலாமன்றம் நாடகங்களைப் பழக்குதல் போன்ற விடயங்களில் ஈடுபட்டிருந்தது என்பது.

வடகிழக்கு மாகாண தமிழ்மொழித்தின நாடகங்கள் பற்றி நாடக எழுத்தாளரும், நெறியாளரும் விமர்சகரும், யாழ்பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளருமான கந்தையா ஸ்ரீகணேசன் தமது "யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு" எனப் பெயரிட்ட நூலில் என்ன கூறுகிறார் எனப் பார்ப்போம்.

தமிழ் நாடக அரங்கு வட-கிழக்கு மாகாணம் எங்கிலும் பல்கிப்பெருகி புதிய படைப்புக்களை அரங்கேற்றுகிறது, எனக்கூறும் இவர் யுத்தத்தால் இடம்பெயர்வும் அகதிநிலைமையும் சாதாரண வாழ்வை சின்னாபின்னப்படுத்திய போதிலும், தமிழரின் கலை வாழ்வு மேலும் மெருகுபடுகிறது என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரி நாடகமான ‘‘அக்கினிக்குஞ்சு’’ பற்றி இதே கட்டுரையில் குறிப்பிடும் இவர் ‘‘ஏணிப்படிகள்’’, ‘‘பொறுத்ததுபோதும்’’ ‘‘சங்காரம்’’ ஆகிய நாடகங்களின் அரங்கப்பாணியில் தயாரிக்கப்பட்ட ‘‘அக்கினிக்குஞ்சு’’ எனும் நாடகம், பல்வேறுபட்ட பேதங்களால் சிதைவுற்று விடுதலை தவறிக்கெட்டு, ஒற்றுமையின்றி மக்கள் வாழ்வதையும், மனிதம் என்ற ஒன்றின் பெயரால் அவர்கள் ஒன்றுபட்டு இன, மத, பிரதேச பேதங்களை வென்று மானுடத்தை உயர்த்துவதையும் அளிக்கை செய்தது.

நாடகம் தொடங்கி முடிவுறும் வரையிலும் எதுவித தொய்வின்றி, ஏதும் பிசிறின்றி ஒரே நிகழ்ச்சி வேகத்தில் கச்சிதமாக ஆக்கப்பட்டு திருக்கோணமலை மாவட்ட மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது. எனினும் வெறுமனே தசைநார் பயிற்சியினூடாக உடல்களில் ஒத்திசைவான பொறிமுறைத் தன்மையில் அப்பியாச செயல்முறை போன்று அளிக்கப்பட்ட இந்நிகழ்வு பெரும்கலைத்துவ வெற்றியை நுகரும் பார்வையோனுக்கு அளிக்க முடியாது போனது என்பதை இந்நாடக முறைமை நிரூபித்தது எனக்கூறுகிறார்.

எனினும் நிச்சயமாக இந்நாடகமும் இங்கே மேலே கூறப்பட்ட பல பாடசாலை நாடகங்களும் முன்னைய காலத்தில் திருமலையில் மேடையேற்றப்பட்ட நாடகங்களினின்றும் வேறுபட்டு முன்னேற்றப்பாதையில் அமைந்திருந்தன என்பது மறுப்பதற்கில்லை.

இனி வெளியார் (பாடசாலை நாடகங்களுக்கு வெளியே) நாடகங்களைக் கருத்திற் கொள்ளும்போது முதலில் வருவது கீழைத்தென்றல் கலாமன்றத்தினருக்காக பிரதியாரித்து நெறிப்படுத்தி வி. ஜெகநாதன் அவர்கள் அளித்த ‘‘லட்சுமி’’ நாடகமே.

கொழும்பு புனித அந்தோனியார் இளைஞர் முன்னனி 1997ம் ஆண்டில் நடாத்திய நாடு தழுவிய நாடகப்போட்டியில் முதலாவதாக தெரிவுசெய்யப்பட்டு கருதினால் கூரே விருது பெற்றதான மேற்படி நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு மாத்தளை, உடப்பு, அண்மையில் (சித்திரை மாதம்) வந்தாறு மூலை கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை கலை, கலாச்சார பீடம் நடாத்திய உலகநாடக தின விழா ஆகிய இடங்களிலெல்லாம் மேடையேற்றி மிகவும் பாராட்டுப்பெற்றது.

காணாமல்போன மகனுக்காக விசாரணைக்கு உட்படுத்தப்படும் லட்சுமி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதும், பின் அவள் சார்ந்த சமூகத்தாலும், கணவனாலும் துன்புறுத்தப்பட்டு அவளின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படுவதையும் அளிக்கை செய்கிறது. ' 'லட்சுமி''.

' 'மொழியின் பன்முகத்தன்மை வாய்ந்த பிரஞ்ஞையுடன் எழுத்துரு கூர்மையுடைய முயற்சிக்கிறது. அனுபவமும் அளிக்கையில் தீவிர நாட்டமும் கொண்டுள்ள வி. ஜெகநாதன் அவர்களிடம் இன்னமும் நிறையவே எதிர்பார்க்க வேண்டியுள்ளது'' என இந்நாடகம் பற்றிய தமது கட்டுரையில் கூறுகிறார் வி. கௌரிபாலன். சிறப்பான இந்நாடகத்தில் சில நடிகர்களின் நடிப்புமுறையின் அதீதத்தன்மை சிலவேளைகளில் நாடகத்தின் மெருகைக் குறைக்கிறது என்ற ஒரு குறைபாடு முன்வைக்கப்படுகிறது. இவ்விடயத்தில், அடுத்த அளிக்கைக்கு முன்னர் நெறியாளர் ஜெகநாதன் கவனமெடுப்பார் என நம்பலாம்.

மேற்கூறிய விடயங்களைப் பார்க்கும்போது, இன்றைய காலகட்டத்தில் சிறப்பாக திகழும் பாடசாலை நாடகங்களில் ஈடுபடுவோர் எதிர்காலத்தில் பொதுவாக திருக்கோணமலை நாடக அரங்கிற்கு சிறப்பான பங்களிப்பாளர்களென எதிர்பார்க்கலாம். இவ்வெதிர்பார்ப்பு அண்மைக்கால இன்றைய நாடகச் சூழலில் இலங்கைத் தலைநகரோடு ஒப்பிட்டு நோக்கும்போது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை அளிக்கும் சிறப்பான பங்களிப்பின் பிரதி பலிப்பாக உணரப் படக்கூடிய ஒன்றேயெனில் மிகையாகாது.

***காசிநாதர் சிவபாலன்***
சட்டத்தரணி
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரியக் கலைகள்



ஒவ்வொரு பிரதேச மக்களிடையேயும் அவ்வப் பிரதேசத்திற்குரிய பாரம்பரியமான வழக்காறுகள் இருந்து வந்துள்ளன. சடங்கு முறைகள், தெய்வ வழிபாடுகள், விழாக்கள் கலை இலக்கியங்கள் போன்றவற்றைப் பிரதானமாக எடுத்துக் கூறலாம். பிரதேச மக்கள் அன்றாடம் அனுபவித்த அல்லது நடைமுறைப் படுத்திய இச்செயல்முறைகள் இன்றும் பிரதேச மக்களிடையே கிராமங்களிடையே அவ்வாறே கடைப்பிடிக்கப்பட்டும் பேணப்பட்டும் வருவதைக் காண்கின்றோம்.

மக்களிடையே பேணப்பட்டும் போற்றப்பட்டும் வந்த மரபுகள் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள் கட்டுக் கோப்புக்கள், கலைகள், இலக்கியங்கள், அவர்களது வாழ்க்கை முறையில் ஒற்றுமைப் பிணைப்பையும் பிரதேச ஒருமைப் பாட்டையும் நிலை நிறுத்தியதோடு அவர்களது அவநம்பிக்கைகள் அவலங்கள் ஏழ்மைகள் என்பவற்றைப் போக்கி வாழ்வியலை - மகிழ்ச்சிகரமாகக் கொண்டு செல்ல வழிவகுத்தன என்றால் மிகையாகாது.

பழங்குடி மக்களின் வாழ்க்கைமுறை பண்பாடு பழக்கவழக்கம் மரபுகள் வரலாறு போன்றவற்றையெல்லாம், அவ்வவ் கால கலை இலக்கியங் களினூடாகவே காண்கின்றோம். இந்த வகையில் பாரம்பரியங்களும் கலை இலங்கியங்களும் மானிட வாழ்வியலில் முக்கியத்துவம் பெறுகின்றது.

கலை என்பது அழகோடு கூடிய அறிவுத் திறனையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதென்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். கலைகள் அறுபத்து நான்கு என்று கம்பர் குறிப்பிடுகின்றார் இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை என்ற மூன்றுக்குள்ளும் அறுபத்து நான்கு கலைகளும் அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை பிரதேசத்தை நோக்கும் போது முத்தமிழ் கலையும் மேலோங்கிய பிரதேசம் என்று குறிப்பிடலாம். தில்லையில் நடனம் புரியும் தில்லைக் கூத்தன் நடராஜப் பெருமான் மாதுமை சமேதராய் திருக்கோணமலையில், எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றான். இந்த ஆடல்வல்லான் குடிகொண்டசிவபூமி வரலாற்றுப் பெருமை கொண்டது இதிகாச நாயகன். இராவணன் வழிபட்ட சிவஸ்தலம் தேவார முதலிகளுள் ஒருவரான திருஞானசம்பந்தர் தேவாரப் புகழ்மாலை சூடிய திருத்தலம், தெட்சணகைலாயம் என்றெல்லாம் போற்றப்படும் திருக்கோணமலைத் தலத்திலே ஆய கலைகள் அறுபத்து நான்கும் இங்கு தவழ்கின்றன என்று கூற முடியும்.

திருக்கோணமலை பிரதேசம் மூவின மக்களின் கலை கலாசாரம் பிரதிபலிக்கும் இடமாகத் திகழ்கின்றது மேலத்யே கலாசார ஊடுருவலும் சற்று உயர்ந்துள்ளது என்று கூறக் கூடியதாக உள்ளது.

திருக்கோணமலை மாவட்டப்பாரம்பரிய பாரம்பரியக் கலைகள் பற்றி ஆராயும் போது வடமோடி, தென்மோடிக்கூத்து வசந்தன்கூத்து காத்தவராயன் கூத்து - வில்லுப்பாடல் கரகம் கும்பி, கோலாட்டம் கும்பம் காவடி கொம்புமுறி ஊஞ்சல்பாடல், கவிப்பாடல் காவியம், அம்மானை, தாலாட்டுப் பாடல் விவசாயம், கடற்றொழில் சார்ந்த தொழில் பாடலக்ள வாய்மொழிப்பாடல்கள் போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

தற்காலம் கரகம், காவடி கும்பம், காவியம் அம்மானை தாலாட்டுப் பாடல் போன்றவை ஆலய உற்சவங்களில் அவ்வப்போது ஆடப்பட்டும், பாடப்பட்டும் வருவதைக் காண முடிகின்றது. மேலும் தாலாட்டுப் பாடல்கள் அகவல், காவியம் போன்றவை சில கிராமப்புறங்களில் இல்லவழிபாடுகளின்போது பாடப்பட்டுவருதை அறிகின்றோம். ஏனைய கூத்துக்கள் வில்லுப்பாடல்கள் போன்றவை கல்வித்துறை சார்ந்த போட்டிகளுக்கு பயிற்றுவிப்பதும், மேடையேற்றுவதோடும் நின்று விடுகின்றன.

## பாரம்பரியக்கும்ப விழா

இது திருக்கோணமலை பிரதேசததின் தனித்துவமான விழாவாகும். வழிபாட்டுடன் தொடர்புடைய இவ்விழா இலங்கையில் எப்பாகத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படாத. சிறப்பினைக் கொண்ட விழாவாக உள்ளது. நவராத்திரி விஜயதசமி அன்று இடம்பெறும் இவ்விழா இந்நகரைச் சோபிக்கச் செய்கின்றது ஆலயங்களிலிருந்து அடியார்கள் புடைசூழ தோரணங்கள் அழகுக் கோலம் போட தவில், பறை உடுக்கு, சல்லாரி வாத்திய ஓசை முழங்க தாளத்திற்கேற்றவாறு பாடல்கள் பாட கும்பம் ஆடுபவர்கள் ஒழுங்கமைத்து நின்று ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

## வடமோடி / தென்மோடிக்கூத்து

திருக்கோணமலை மூதூர் ஈச்சிலம்பற்று பிரதேசத்திலே இக்கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. இக்கூத்துக்கள் பரதம் போன்ற ஒரு உன்னத கலை வடிவமாகும். தாளம், தரு, மெட்டுப்பிசகாத ஆட்டங்கள் அவ்வாறான பாடல்கள் அமைந்த கூத்துக்களாகும். பாடல்கள் நல்ல சந்த அமைப்பு ஓசைநயம் பொருள் வளம் மிக்க பாடல்களாகும்.

### வடமோடி கூத்துப் பாடல் ஒன்று

(பகதத்தன் போர் - அர்ச்சுனன் பாடும் பாடல்) " காண்டீபம் எந்தன் கை தன்னிலிருக்குதே அண்ணா அந்தக் கன்னன் மற்றும் பேரைப் பின்னப்படவே செய்வேன் அண்ணா".

### தென்மோடி கூத்துப்பாடல் ஒன்று

(சத்தியவான் - சாவித்திரி - சாவித்திரி பாடல்)

நன்ன நன்ன நான நன்ன நானா
நன்ன நானன்ன நானநன்ன நானா

"பகலவனைக் கண்ட பனி போலே
எங்கள் துயர மெல்லாம் தீர்த்தவரே போற்றி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை செய்கையோடு தொடர்புடைய பொலிப்பாடல் ஒன்று

பொலி தாயே பொலி தம்பிரானே ~ பொலி
பூமி பொலி பூமாதேவி அம்மா ~
மண்ணின் களமே மாதாவே
நிறைகளமே பொன்னின் களமே
பூமாதேவி அம்மா
பொலி, பொலி தாயே பொலி"

"கடற் றொழிலோடு தொடர்புடைய பாடலொன்று
வள்ளம் கரைசேர்க்கும் பாடல்"

ஏலோ ஈலோ, ஏலி ஈலோ
இந்தத் தோணி இந்தப் பாரம்
பாரரோ படகோ பாரிச்சுக் கொண்டு
ஏலோ ஈலோ, ஏலி. ஈலோ

மேற்குறிப்பிட்ட ஆடல்பாடல் பாரம்பரியக் கலைவடிவங்களும், வழக்காறுகளும் பெரிய அளவிலான ஆய்வுக்கு இன்னும் எடுத்துக் கொள்ளப் படவில்லை என பல அறிஞர்ப் பெருமக்கள் குறிப்பிட்டுள்ளனர். இவற்றை அருகிப் போகவிடாமல், முக்கியத்துவம் கொடுத்து முன்னெடுத்து ஆய்வுக் குட்படுத்துவதும், ஆவணப் படுத்துவதும் சமுதாயத்திற்குச் செய்யும் மேலான பணியாகக் கொள்ளப்படுகின்றது.

*சி. மகேந்திரராஜா*
மாவட்ட கலாசார. அலுவலர்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச சாகித்திய விழா போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை

# சமூகத்தின் சாட்சிகள்

எரிந்து கொண்டிருக்கும் தேசத்தின்
சொந்தக்காரர்கள் நாங்கள்
மண்ணில் எங்கும் தேடல்களின் அவலங்கள்
தொடராக ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றன.
தேடிக்கொண்ட வளங்களின் மீது – என்றும்
அழியாத சின்னமாக ஆயுத அடையாளங்களும்
அக்னி ஆக்கிரமிப்புக்களும்.

கண்ணாடி வீடுகளென்று காயப்படுத்தியவர்கள்
காலத்தின் கட்டாயத்தினால் –தம்
நெஞ்சக்கூட்டின் வஞ்சத்தனங்களைக் குறைத்து
முறைப்புகள் மறைத்த முகங்களைக் காட்டுகிறார்கள்.
இங்கே –
விடுப்பு பார்த்தவர்களின் வீடுகளும் விதவைக் கோலத்தில்

மனமும் வறண்ட மண்ணில் – எம்
முகங்கள் தொலைந்துவிடவில்லை வீணே
தொலைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
